**திருத்தங்கல் நகராட்சி**
**அவசர கூட்டம்**

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2045 ஹேவிளம்பி வருடம் பங்குனி திங்கள் 14 நாள் **28–03–2018** ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து அவசர கூட்டம் நடைபெறும்.

**முன்னிலை : திரு.எஸ். முகம்மது சாகுல் ஹமீது, எம்.இ.,**

திருத்தங்கல் நகராட்சி
நாள் . 27–03–2018

**தனி அலுவலர்**
**திருத்தங்கல் நகராட்சி**

**கூட்டப்பொருள்–33**

- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு, சொத்து வரியிலிருந்து விலக்களிக்கவும்.
- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்து வரி விதிக்கவும்.
- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் பட்சத்தில் அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்,
- கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவிபெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்துவரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்து வரியாக விதிக்கவும்.
- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83 (1) (சி)–ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–2018 இரண்டாம் அரை ஆண்டிலிருந்து, மேற்படி கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்,
- தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 78 (3)–ன்படி, ஆட்சேபணைகளை அளிப்பதற்காக ஒரு தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடுவதற்கும் மற்றும் அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்வதற்கும் அனுமதி அளித்துள்ளது.

**அலுவலகக் குறிப்பு:-**

அறிவிப்பு பகுதி IV பிரிவு 2 எண்.33, நாள்.25.01.2018ல் சட்ட எண்.6/2018 தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் (இரண்டாவது திருத்தம்) திருத்தப்பட்டுள்ளவாறு

தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920–பிரிவு 83 உட்பிரிவு 1 பகுதி (சி) ன்படி திருத்தங்கல் நகராட்சியிலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் அவை சம்பந்தப்பட்ட விடுதிகள், நூலகங்கள் தவிர அரசு உதவி பெற்று சுய நிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவனங்கள் மற்றும் ஏனைய அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் என சட்டமாக்கப்பட்டுள்ளதை திருத்தங்கல் நகராட்சியில் நடைமுறைப்படுத்தி வசூலிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 834/2018/அ1

**கூட்டப்பொருள்–34**

திருத்தங்கல் நகராட்சி உரகிடங்கு வாங்க நிதி பெறப்பட்டு ஆனைகுட்டம் கிராம சர்வே எண்.503,509,510,511/1A,607/1B-ல் சுமார் 7 ஏக்கர் 37.5 சென்ட நிலம் வாங்கப்பட்டது. அவ்விடத்தில் உரகிடங்கு அமைக்க எதிர்ப்பு தெரிவித்து உயர்நிதி மன்ற மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு (WD (MD) No.749408 நாள்.05.05.2015), நிலுவையில் உள்ளது. எனவே திருத்தங்கல் நகராட்சி எல்லைக்குட்பட்ட கண்ணகி காலனி பகுதியில் புல எண்.892-ல் உள்ள கால்நடை பராமரிப்பு துறைக்கு பாத்தியப்பட்ட 25 ஏக்கர் மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தில் உரகிடங்கு அமைக்க, 7 ஏக்கர் 37.5 சென்ட் மாற்று நிலமாக பெறவும், அதற்கு பதிலாக ஆனைகுட்டம் பகுதியில் இந் நகராட்சிக்கென உரகிடங்கு அமைக்க வாங்கப்பட்ட 7 ஏக்கர் 37.5 சென்ட் நிலம் மற்றும் அவ்விடத்தில் உள்ள வாட்டர் டேங்க் ஆழ்குழாய் கிணறு ஆகியவற்றை கால்நடை துறைக்கு மேய்ச்சல் புறம்போக்கு நிலமாக நிலஉரிமை மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. ஆனைகுட்டம் பகுதியில் திருத்தங்கல் நகராட்சிக்கு வாங்கபட்ட 7 ஏக்கர் 37.5 சென்ட் நிலத்தை மேய்ச்சல் புறம்போக்கு (வாட்டர் டேங்க் மற்றும் ஆழ்துளை கிணறு உட்பட) நிலத்தை கால்நடை பராமரிப்பு துறைக்கு மேய்ச்சல் புறம்போக்கு இடமாக நில உரிமை மாற்றம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2. கால்நடை பராமரிப்பு துறைக்கு பாத்தியப்பட்ட திருத்தங்கல் நகராட்சி எல்லைக்குட்பட்ட கண்ணகி காலனி பகுதியில் உள்ள 7 ஏக்கர் 37.5 சென்ட் நிலம் மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தினை திருத்தங்கல் நகராட்சி உரகிடங்கு அமைக்கும் பணிக்கு நில உரிமை மாற்றம் செய்ய மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.584/2012/எப்1

ஆணையாளர் / தனி அலுவலர்
திருத்தங்கல் நகராட்சி